**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS.397/2015**

**14.10.2025.**

**PW-1**

**வா.சா.1. அருணாச்சலம் த/பெ.நாராயணசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

(வாதி ஏற்கனவே குறுக்கு விசாரணையில் சொன்ன 20.11.2011ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை ஒப்படைக்கக்கோரி பலமுறை சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு வாதி ஒப்படைக்கவில்லை. அப்படி ஒரு ஆவணமே அந்த தேதியில் இல்லை என்று சாட்சி கூறியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி அனுமதிக்கப்பட்டார்).

ஏற்கனவே முதல் விசாரணையில் 20.11.2011ல் 10 நபர்கள் கலந்துக்கொண்ட பஞ்சாயத்து நடைப்பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் – சரிதான். அந்த 10 நபர்கள் யார் யார் என்றால் – சூர்யகுமார் என்பவர் இருந்தார். நான் இருந்தேன். பிரதிவாதி பாலசுப்ரமணியன் இருந்தார். ஒரத்தூர் கிராமத்தில் எனது வீட்டில் வைத்து பஞ்சாயத்து நடந்தது. பஞ்சாயத்தில் எனக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் – பிரதிவாதி கட்டியிருக்கும் வீட்டிற்கு நேர் எதிர்புறம் உள்ள 6 செண்ட் எழுதப்பட்ட பத்திரத்தின் அடிப்படையில் நிலம் ஒதுக்காமல் 5 செண்ட் நிலம் ஒதுக்கினார்கள். 4.1/2 மா நிலம் கொடுத்தார்கள். அந்த நிலம் கடம்பூர் கிராமத்தில் உள்ளது. என்ன சர்வே நம்பரில் உள்ளது என்றால் – எனக்கு தெரியாது. எனக்கு ஒதுக்கப்பட்ட 4.1/2 மா நிலத்தை நான் 15 ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகிறேன் என்றால் – சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட மனைக்கட்டு சும்மா தான் கிடக்கிறது. வழக்கு என் தம்பி வீடு கட்டியுள்ள மனைக்கட்டிற்கு தான் போட்டுள்ளேன் என்றால் – இரண்டு மனைக்கட்டிற்கு போட்டுள்ளேன். கடம்பூரில் உள்ள நிலத்தை மட்டும் சேர்க்கவில்லை. எனது பெயரில், கொரடாச்சேரி இந்தியன் வங்கி கிளையில் டி.டி. நம்பர் 81824, ரூ.45 ஆயிரத்திற்கு பஞ்சாயத்து முன்னிலையில் கொடுத்தார்கள் என்றால் – தெரியாது. எனது தம்பி எனது கட்சிக்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளதை படித்து பார்த்தேனா என்றால் – எனக்கு தெரியாது. எங்களுக்குள் பாகப்பிரிவினை 2011லேயே நடந்துவிட்டது என்றும் அவரவர் பாகத்திற்கு சொத்து ஒதுக்கப்பட்டுவிட்டது என்றும் நான் என் தம்பிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்தினை பொறுத்து மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் – சரியல்ல. 2011ல் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் என் வசம் தான் உள்ளது என்றும் அதனை தாக்கல்

செய்வதாக ஒப்புக்கொண்டேன் என்றும் அந்த பத்திரத்தை தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் – சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/– எஸ். முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.